# கற்றல் விளைவுகள்

## (தொடக்கநிலை வகுப்புகளுக்கான கற்றல் விளைவுகள்)

## முதல் வகுப்பு

### தமிழ்

**T - 101** பாடம் ஒப்புவித்தல், கதைகள் கூறுதல் வினாக்கள் எழுப்புதல், சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவற்றிக்குத் தங்கள் சொந்த மொழி, பள்ளி மொழியைப் பயன்படுத்துதல்.

**T - 102** கதை,பாடல் முதலானவை குறித்துக் கலந்துரையாடவும், வினா எழுப்பவும் கருத்துரை கூறவும் முயற்சி செய்தல்.

**T - 103** மொழியில் உள்ள ஒலிகள், சொற்களைக் கொண்டு விளையாடி மகிழ்தல் (எ.கா) படம், மடம், குடம்.

**T - 104** அச்சடித்த மற்றும் அச்சடிக்கப்படாதவற்றை வேறுபடுத்தி அறிதல். (எ.கா) படம், வரைபடம் போன்றவை.

**T - 105** ஓவியம் மற்றும் படங்களின் வெளிப்படையான மற்றும் மறைமுகமான கூறுகளை நுட்பமாக உற்று நோக்கல்.

**T - 106** ஒரு கதையில் / சூழலில்/ தொடர்ச்சியான படங்களில் உள்ள நிகழ்வுகள், செயல்பாடுகள் மற்றும் கதை மாந்தர்களின் இயல்புகள் ஆகியவற்றைப் புரிந்துக்கொண்டு நயம் பாராட்டுதல்.

**T - 107** கதை அல்லது பாடலில் எழுதப்பட்ட அல்லது சொல்லப்பட்ட எழுத்துகள் / சொற்கள் / தொடர்களைப் படித்தும் / கேட்டும் புரிந்து கொள்ளல்.

**T - 108** அச்சடிக்கப்பட்டவற்றின் பொருளையும், நோக்கத்தையும் அது கிடைக்கும் சூழலின் உதவி கொண்டு ஊகித்தறிதல். (எ.கா) மிட்டாய், சாக்லேட் போன்றவற்றின் பெயர்களை உறைகளைக் கண்டபோதே ஊகித்தறிதல்.

**T - 109** அச்சடிக்கப்பட்டவற்றில் சொற்கள், தொடர்களின் அலகுகளை இனம் காணுதல். (எ.கா) என் பெயர் செல்வம்.

**T - 110** மதிய உணவு வரைவுப்பட்டியல் (தெரிந்தது / தெரியாதது) வகுப்பின் பெயர், ஒருவர் விரும்பும் புத்தகத்தின் தலைப்பு, பல கருவிகளின் பயன்பாடுகள், பொருண்மைத் தேடிக்காணல், தீர்மானித்தல். (ஓவியம், அச்சடித்த பகுதிகள், எழுத்துகளின் வரிவடிவம், ஒலிவடிவம் ஆகியவற்றின் துணையுடன் முந்தைய அறிவின் அனுபவத்தின் துணை கொண்டு சொற்களை இனங்காணல், ஊகித்தறிதல்)

**T - 111** தமிழ்மொழி எழுத்துகளின் வரிவடிவம், ஒலிவடிவங்களை அடையாளம் காணல். பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் தாம் விரும்பும் புத்தகங்களைத் தெரிவு செய்தல். (கற்றல் மூலை அல்லது நூலகத்திலிருந்து)

**T - 112** எழுதுதல்; எழுதப் பழகும்போது மாணவர்கள் தம்மை வெளிப்படுத்துவதற்குப் பின்வரும் வழிகளைப் பின்பற்றலாம். ஓவியங்கள், குறுக்கு, நெடுக்குக் கோடுகள் வரைதல், எழுத்துக்கூட்டல், மரபுவழி எழுதுதல், வளர்ச்சி நிலைக்கு சுயக்கட்டுப்பாட்டுடன் எழுதுதல்.

### ENGLISH

**E -101** Associates words with pictures.

**E -102** Names familiar objects seen in the pictures

**E -103** Recognises letters and their sounds A to Z

**E -104** Differentiates between small and capital letters in print or Braille.

**E -105** Recites poems / rhymes with actions

**E -106** Draws scribbles in response to poems and stories.

**E -107** Responds orally ( in any language including sign language) to comprehension questions related to stories / poem.

**E -108** Identifies characters and sequence of your story and asks questions about the story.

**E -109** Carries out simple instruction such as 'shut the door' 'bring me the book' and such others

**E -110** Listens to English words, greetings, polite forms of expression, simple sentences and responds in English or the home language or 'singing' (using sign language)

**E -111** Listen to instruction and draws a picture.

**E -112** Talks about self / situations / pictures in English

**E -113** Uses nouns such as 'boy', 'Sun' and prepositions like 'in', 'on' 'under',etc.

**E -114** Produces words with common blends like 'br', 'fr' like 'brother', 'frog' etc.

**E -115** Writes simple words like 'fan','hen', 'rat' etc.

### கணக்கு

**M -101** வடிவம், அளவு போன்ற சில இயற்பியல் பண்புகள் அடிப்படையிலும் உருளுதல் மற்றும் நழுவுதல் போன்ற உற்று நோக்கக் கூடிய பிற பண்புகள் அடிப்படையிலும் பொருள்களைக் குழுக்களாக வகைப்படுத்துதல்.

**M -102** படங்கள் மற்றும் குறியீடுகளைக் கொண்டு 20 வரை பொருள்களை எண்ணுதல் மற்றும் எண்களின் பெயர்களை வரிசையாகக் கூறுதல். 1 முதல் 9 வரையிலான எண்களை பொருள்களை பயன்படுத்தி எண்ணுதல்.

**M -103** 20 வரையிலான எண்களை ஒப்பிடுதல் எடுத்துக்காட்டாக வகுப்பறையில் மாணவியரின் எண்ணிக்கையை மாணவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டு எது அதிகம் என்று கூறுதல்.

**M -104** அன்றாட வாழ்வில் எண்களின் கூட்டல் மற்றும் கழித்தல் பயன்படுத்துதல் 1 முதல் 20 வரை பருப்பொருள்களைப் பயன்படுத்தி 1 முதல் 9 வரையிலான கூட்டல் விதிகளைக் கட்டமைத்தல் .(எ.கா) 3+3 என்பதை அறிய 3 என்பதில் இருந்து 3 அடி நடந்து 6 என்பதை அடைதல் 3+3 =6.

**M -105** 1 முதல் 9 வரை எண்களைப் பயன்படுத்தி கழித்தல். (எ.கா) 9 பொருள்களிலிருந்து 3 பொருளை எடுக்கச் செய்து, மீதமுள்ள பொருள்களை எண்ணி 9-3 = 6 என்று முடிவிற்கு வருதல்.

**M -106** 1 முதல் 9 வரை உள்ள எண்கள் சார்ந்த கூட்டல் மற்றும் கழித்தல் தொடர்பான வாழ்வியல் கணக்குகளுக்குத் தீர்வு காணல்.

**M -107** 99 வரையிலான எண்களை அடையாளம் கண்டு எண்ணுருக்களை எழுதுதல்

**M -108** குழந்தையின் சொந்த மொழி நடையில் வடிவங்கள் மற்றும் உருவங்களின் இயற்பியல் தன்மைகளை விவரித்தல். எடுத்துக்காட்டாக பந்து உருண்டு செல்லுதல், பெட்டி நழுவிச் செல்லுதல் போன்றவை.

**M -109** மாறுபடும் அளவைகளான விரல் நீளம், சாண், முழம், காலடி போன்றவற்றைப் பயன்படுத்தி சிறிய நீளத்தை மதிப்பீடு செய்தல்.

**M -110** எண்கள் மற்றும் வடிவங்களை உற்றுநோக்கி அந்த அமைப்பு முறையின் அடுத்து வரும் எண்கள் மற்றும் வடிவங்களை உருவாக்குதல். (எ.கா) எண்கள், பொருள்கள், வடிவங்களை அடுக்குதல்.

**M -111** சேகரித்தல், பதிவு செய்தல் ( படங்கள் எண்களைப் பயன்படுத்தி ) மற்றும் காட்சிகளைப் பார்த்து எளிமையான தகவல்களை விளக்குதல் ( உதாரணமாக, ஒரு தோட்டத்தின் படத்தில் குழந்தை வெவ்வேறு பூக்களைப் பார்த்து, ஒரு குறிப்பிட்ட நிறத்தில் பூக்கள் அதிகமாக இருப்பதை அனுமானித்தல்.

**M -112** இல்லாத, கிடைக்காத பொருட்களுக்கு எண்ணாகவும் குறியீடாகவும் 'பூஜ்ஜியத்தை' குறித்தல்.

# கற்றல் விளைவுகள்

## ( தொடக்கநிலை வகுப்புகளுக்கான கற்றல் விளைவுகள் )

## இரண்டாம் வகுப்பு

### தமிழ்

**T -201** மாணவர்கள் தம் சொந்த மொழியில் பல்வேறு காரணங்களுக்காக பிறருடன் உரையாட தொடங்குதல் இது பள்ளியில் உள்ள எம்மொழியிலும் இருக்கலாம். தகவல் திரட்டும் பொருட்டு வினா எழுப்புதல் சொந்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல், தமது சொந்த நடையில் தருக்கவியல் முறையில் விளக்கமளித்தல்.

**T -202** கவனமுடன் கேட்டவற்றைத் (செய்யுள், கதைகள்) தம் சொந்த மொழியில் மறு உருவாக்கம் செய்தல்

**T -203** தாம் பார்த்த, கேட்ட கதை, பாடல் பற்றிப் பேசுதல், அவை குறித்த துலங்கல்களைத் தருதல்.

**T -204** தங்களின் தனிப்பட்ட வாழ்வு மற்றும் சூழலில் ஏற்பட்ட சொந்த அனுபவங்களைப் பாடல், கதை, விளம்பரங்கள் போன்றவற்றுடன் தொடர்புபடுத்தி ஆய்வுகளில் அல்லது உரையாடல்களில் பங்கு பெறுதல்.

**T -205** ஒரு மொழியின் ஒலி மற்றும் சொற்களின் அடிப்படையில் ஒலி இயைபுப் பாடல்களை உருவாக்குதல். (எ.கா) அம்மா இங்கே வா வா , ஆசை முத்தம் தா தா

**T - 206** கதைகள் பாடல்களைத் தங்கள் சொந்தக் கற்பனையின் அடிப்படையில் கூறுதல், இருக்கிற பொருட்களை அதிகரிக்கச் செய்தல்.

**T - 207** தங்கள் வயதுக்கும் விருப்பத்திற்கும் ஏற்பக் கதைகள், பாடல்கள், விளம்பர அட்டைகள், ஓவியங்ளைப் படித்து வினா எழுப்புவதிலும், விடைதருவதிலும் மகிழ்ச்சி அடைதல்.

**T - 208** ஓவியங்கள், படங்கள் வெளிப்படையான மற்றும் மறைமுகமான கூறுகளை உற்று நோக்கல்.

**T - 209** ஒரு சூழல் அல்லது கதையை விளக்கும் தொடர் சித்திரங்கள், இத்தொடர்களில் உள்ள பாத்திரங்கள், செயல்பாடுகள், நிகழ்வுகள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டு நயம் பாராட்டுதல்.

**T - 210** அறிமுகமான அல்லது அறிமுகமில்லாதன பற்றி எழுதப்பட்ட பொருட்களின் மீது ஆர்வம் கொண்டு அவற்றின் பொருண்மையைத் தேடிக் கண்டறிதல். (சான்றாக அச்சிடப்பட்ட ஓவியங்கள் உதவியுடன் அவை உணர்த்தும் பொருளை ஊகித்தல், வரிவடிவ ஒலிவடிவத் தொடர்புகளின் அடிப்படையில் சொற்களை இனங்காணல், தங்களின் முந்தைய அறிவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பொருத்திப் பார்த்தல்)

**T - 211** என் பெயர் தமிழ்மலர். – போன்ற அச்சடிக்கப்பட்ட அல்லது எழுதப்பட்ட எழுத்துகள், சொற்கள், வாக்கிய அலகுகள், மற்றும் கருத்தமைவுகளைப் புரிந்துகொள்ளுதல். – இத்தொடரில் எத்தனை எழுத்துகள் உள்ளன? அவற்றைக் கூறுக. மலர் என்ற பகுதி எங்குள்ளது ? என்றவாறு தமிழ் மொழியில் உள்ள எழுத்துகளின் வரிவடிவங்களையும், ஒலிவடிவங்களையும் அடையாளம் காணல்.

**T - 212** பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் தாம் விரும்பும் நூல்களைத் தேடிப்படிக்க முயற்சித்தல். ( கற்றல் மூலை அல்லது நூலகத்திலிருந்து)

**T - 213** ஓவியங்கள் வரைதல், குறுக்கு நெடுக்குக் கோடுகள் வரைதல். எழுத்துகள் மற்றும் பிற வடிவங்களையும் வரையும் செயல்களைத் தாங்களே சொந்தமாகவோ அல்லது ஆசிரியரின் வழிக்காட்டுதலுக்கு ஏற்பவோ மேற்கொள்ளுதல். இதன் தொடர்ச்சியாக தானே வடிவமைத்த எழுத்துக் கூட்டல்கள் மற்றும் மரபு சார்ந்த அல்லது தன் கட்டுப்பாட்டிலுள்ள எழுதுதல் செயலை மேற்கொள்ளுதல்.

**T- 2 14** தாங்கள் கேட்டவற்றை அல்லது சிந்தித்த , உணர்ந்தவற்றை எழுத்து வடிவிலோ, படமாகவோ, சொற்களாகவோ, தொடர்களாகவோ தாம் விரும்பிய வண்ணம் வெளிப்படுத்துதல்

**T- 2 15** தங்கள் தனிப்பட்ட வாழ்விலும் சூழலிலும் பெற்ற அனுபவங்களைத் தங்கள் எழுத்துகளில் உட்படுத்திக் கொள்ளுதல், ஒருவரது கற்பனைக்கு ஏற்ப ஒரு கதை, பாடல் முதலானவற்றை முன்னெடுத்துச் செல்லுதல்.

### ENGLISH

**E - 201** Sings Songs or Rhymes with action

**E - 202** Responds to comprehension questions related to stories and poems, in home language or English or sign language, orally and in writing ( phrases / short sentences

**E - 203** Identifies characters, and sequence of events in a story

**E - 204** Expresses verbally her or his opinion and ask questions about the charactors, story line, etc., in English or home language.

**E - 205** Draws or writes a few words or short sentence in response to poems and stories.

**E - 206** Listen to English words, greetings, polite forms of expression and responds in English / home language like 'How are you?', 'I' m fine, thank you.' etc.

**E - 207** Uses simple adjectives related to size, shape, colour, weight, texture such as 'big', 'small', 'round', 'pink' 'red' 'heavy' 'light' 'soft' etc.

**E - 208** Listens to short texts from children's section of newspapers, read out by the teacher.

**E - 209** Listens to instructions and draws a picture.

**E - 210** Uses pronouns related to gender like 'his / her, 'he / she', 'it' and other pronouns like 'this / that' , here / there' 'these / those' etc.

**E - 211** Uses prepositions like 'before', 'between' etc

**E - 212** Composes and writes simple, short sentences with space between words.

### கணக்கு

**M - 201** 99 வரையிலான எண்களைப் படித்தல், எழுதுதல்.

**M - 202** ஈரிலக்க எண்களை எழுதும் போதும் ஒப்பிடும் போதும் இட மதிப்பைப் பயன்படுத்துதல்.

**M - 203** மிகப்பெரிய மற்றும் மிகச்சிறிய ஈரிலக்க எண்களை ( கொடுக்கப்பட்ட எண்களை மறுமுறை பயன்படுத்தி மற்றும் பயன்படுத்தாமல்) உருவாக்குதல்.

**M - 204** ஈரிலக்க எண்களின் கூட்டல் அடிப்படையில் அன்றாட வாழ்வில் சூழ்நிலை / பிரச்சினைகளைத் தீர்த்தல்.

**M - 205** ஈரிலக்க எண்களின் கழித்தல் அடிப்படையிலான அன்றாட வாழ்வியல் சூழ்நிலைகளைக் கையாளுதல்.

**M - 206** 3 – 4 விளையாட்டுப் பணத்தாள்களையும் காசுகளையும் பயன்படுத்தி ரூபாய் 100 வரை தொகையினை உருவாக்குதல். ஒரே மதிப்புள்ள / வெவ்வேறு மதிப்புள்ள விளையாட்டு பணத்தாள்களைப் பயன்படுத்துதல்.

**M - 207** கனசதுரம், உருளை, கூம்பு மற்றும் கோளம் போன்ற முப்பரிமாண அடிப்படை வடிவங்கள் அவற்றின் பெயர்களைக் கொண்டு அடையாளம் காணுதல்.

**M - 208** நேர்கோடுகள் மற்றும் வளைவு கோடுகளை வேறுபடுத்துதல்

**M - 209** நேர்கோட்டின் பல்வேறு நிலைகளை வரைதல். (செங்குத்துக் கோடு, கிடைமட்டக்கோடு, சாய்வுக் கோடு).

**M - 210** குச்சிகள், பென்சில், குவளை, தேக்கரண்டி, வாளி போன்ற திட்டம் சாரா அளவைகளைக் கொண்டு நீளம் / தொலைவு மற்றும் கொள்ளளவு ஆகியவற்றை தோராயமாக அனுமானித்தல் மற்றும் அளித்தல்.

**M - 211** எளிய தராசைப் பயன்படுத்தி இரண்டு பொருள்களில் எது எடை அதிகமானது / எடை குறைவானது என்பதை ஒப்பிடுதல்

**M - 212** வாரத்தின் நாட்களையும், வருடத்தின் மாதங்களையும் அடையாளம் காணுதல்.

**M - 213** நேரம் நாள்களின் அடிப்படையில் நடைபெறும் நிகழ்வுகளை வரிசைப்படுத்துதல். (எ.கா) ஒரு குழந்தை வீட்டில் இருக்கும் நேரத்தைவிட, பள்ளியில் அதக நேரம் இருக்கிறதா என்று ஆராய்தல்.

**M - 214** சேகரிக்கப்பட்ட தகவல்கள் தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை தீர்மானித்தல். (எ.கா) செந்தில் வீட்டில் பயன்படுத்தப்படும் வாகனங்களை எண்ணிக்கையைவிட, வளர்மதி வீட்டில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகம் போன்றவை.

# கற்றல் விளைவுகள்

## ( தொடக்கநிலை வகுப்புகளுக்கான கற்றல் விளைவுகள் )

## மூன்றாம் வகுப்பு

### தமிழ்

**T - 301** மாணவர்கள் கதைகள் செய்யுட்களை கவனமுடன் கேட்டு அதன் மீதான அவர்களின் எண்ணத்தை கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள்.

**T - 302** கதைகள் பாடல்கள் போன்றவற்றைச் சரியாக ஒலிப்பு முறையுடன் வேகமாகச் சொல்லவும் சத்தத்துடன் பாடல்களைப் பாடவும் செய்தல்.

**T - 303** தாங்கள் கேட்டுணர்ந்த ( சொந்த மொழியில் ) படைப்புகளின் தலைப்புகள் இவற்றில் இடம்பெறும் கதைமாந்தர்கள் பற்றிக் கலந்துரையாடவும் வினாக்கள் கேட்கவும் கருத்துக்களை வெளிப்படுத்தவும் செய்கிறார்கள்.

**T - 304** மாணவர்கள் தங்கள் சுற்றுப்புறங்களை அடுத்தடுத்து நிகழும் பல்வேறு நிகழ்வுகளையும், அதனால் ஏற்பட்ட அனுபவங்களையும் பேசவும், கலந்துரையாடவும் செய்கிறார்கள்.

**T - 305** கதை பாடல் என எவற்றைக் கேட்டாலும் அவற்றைப் புரிந்து கொண்டு, தங்கள் உள்ளீடுகள் மூலம் வளப்படுத்துகிறார்கள்.

**T - 306** பல வகைப்பட்ட செய்தித்தாள்கள், இதழ்கள் போன்றவற்றை படித்து புரிந்து கொண்டு தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும், ஆசிரியர்கள் மற்றும் வகுப்புத் தோழர்களுடன் கலந்துரையாடவும் செய்கிறார்கள்.

**T - 307** புதிய சொற்களின் சூழல் பொருண்மைகளைப் புரிந்து கொண்டு பின்னர், அதன் சரியான பொருளைப் பெற்றுக் கொள்ள இயலுதல்.

**T - 308** பல வகைப்பட்ட கதைகள், செய்யுட்களில் உள்ள மொழியின் நுட்பங்களைப் புரிந்து கொண்டு, அதன் அடிப்படையில் சொற்களையும், பெயர்ச்சொல் போன்றவற்றையும் இனம் கண்டு மாற்றி அமைத்தல்.

**T - 309** பல்வகைப்பட்ட இலக்கியங்களைப் புரிந்துகொண்டு அவை தொடர்பான வினாக்களை கேட்கவும், அவை பற்றி ஆசிரியர்களிடமும், பிற மாணவர்களுடனும் கருத்தாடல் புரியவும் இயலுதல்.

**T - 310** மாணவர்கள், தங்கள் விருப்பத்துடன் அல்லது ஆசிரியரின் வழிகாட்டுதலில் மரபு சார்ந்த முறையிலான எழுத்துப் பணிகளை மேற்கொள்ளல்.

**T - 311** மாணவர்கள் பல்வேறு காரணங்களுக்காக எழுதும்போது சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்துத் தொடரமைப்பு, நடை போன்றவற்றை முற்றிலும் வேறுபட்ட தங்களுக்கு உரித்தான முறையில் எழுதுதல்.

**T - 312** மாணவர்கள், ஒரு தொடரில் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்திச் சரியான முறையில் எழுத இயலுதல்.

**T - 313** செய்தித்தாள்கள், இதழ்கள் ஆகியவற்றிலுள்ள இலக்கியங்களைப் படித்து அதன் அடிப்படையில் அவை பற்றிய கருத்துக்கள் தெரிவிக்கவும், அவை சார்ந்த வினாக்களுக்கு விடை அளிக்கவும் வாய்ப்பு அளித்தல்.

### ENGLISH

**E - 301** Recites poems individually / in groups with correct pronunciation and intonation

**E - 302** Performs in events such as role play / skit in English with appropriate expressions.

**E - 303** Reads aloud with appropriate pronunciation and pause.

**E - 304** Reads small texts in English (i.e) identifies main Idea, details and sequence and draws conclusions in English.

**E - 305** Expresses orally her / his opinion / and understanding about the story and characters in the story, in English / home language

**E - 306** Responds appropriately to oral messages / telephone communication.

**E - 307** Writes / types dictation of words / phrases / sentences

**E - 308** Uses meaningful short sentences in English, orally and in writing. Uses a variety of nouns, pronouns, adjectives and prepositions in context as compared to previous class

**E - 309** Distinguishes between simple past and simple present tenses.

**E - 310** Identifies opposite words like 'day / night' ' close / open' and such others.

**E - 311** Uses punctuation such as question mark, and capital letters approppriately.

**E - 312** Reads printed scripts on the classroom walls : poems, posters, charts etc.

**E - 313** Writes 5 to 6 sentence in English on personal experience / events using verbal or visual clues.

**E - 314** Uses vocabulary related to subjects like Maths, EVS relevant to class III.

### கணக்கு

**M - 301** இட மதிப்புகளைப் பயன்படுத்தி 999 வரை உள்ள எண்களைப் படித்தல் மற்றும் எழுதுதல்.

**M - 302** எண்களின் இடமதிப்பிற்கு ஏற்ப 999 வரை உள்ள எண்களை ஒப்பிடுதல்.

**M - 303** கூட்டுப்பலன் 999க்கு மிகாமல், இலக்கங்களை மாற்றியும் மாற்றாமலும், மூன்றிலக்க எண்களின் கூட்டல் மற்றும் கழித்தலைப் பயன்படுத்தி, அன்றாட வாழ்க்கையில் எழும் கணக்குகளுக்குத் தீர்வு காணல்.

**M - 304** 2,3,4,5 மற்றும் 10- இன் பெருக்கல் அட்டவணைகளை அமைத்து அவற்றை அன்றாட வாழ்க்கைச் சூழலில் பயன்படுத்துதல்.

**M - 305** அன்றாட சூழலில் பொருத்தமான எண் செயல்பாட்டினைப் பகுப்பாய்வு செய்து பயன்படுத்துதல். (Number operation)

**M - 306** சமகுழுவாக்கம் / சம பங்கிடுதல் மூலம் வகுத்தல் விதிகளின் பொருளை விளக்குதல் மற்றும் தொடர் கழித்தல் மூலம் வகுத்தல் விதிகளைக் கண்டறிதல். (எ.கா) 12÷3 என்பதை 3 எண்ணிக்கை கொண்ட எத்தனைக் குழுக்கள் 12 உருவாக்கும் மற்றும் 12 லிருந்து 3 ஐ தொடர்ந்து கழித்தால் அது 4 என அமையும் என்று விளக்குதல்.

**M - 307** சிறிய தொகையினை இன மாற்றம் அல்லது இன மாற்றமின்றி கூட்டுதல் மற்றும் கழித்தல்.

**M - 308** விலைப்பட்டியல் மற்றும் எளிய இரசீதை உருவாக்குதல்.

**M - 309** காகித மடிப்பு, புள்ளிக் கட்டத்தாளை வெட்டுதல், நேர்கோடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இருபரிமாண வடிவங்களை அடையாளம் கண்டு அவற்றை உருவாக்குதல்.

**M - 310** பக்கங்கள், முனைகள் மற்றும் மூலைவிட்டங்களின் எண்ணிக்கையைக் கொண்டு இருபரிமாண வடிவங்களை விவரித்தல் (எ.கா.) புத்தக அட்டையின் வடிவம் 4 பக்கங்கள், 4 முனைகள், 2 மூலைவிட்டங்களைக் கொண்டுள்ளது.

**M - 311** கொடுக்கப்பட்ட வடிவத்திலான தள நிரப்பியைக் கொண்டு இடைவெளியின்றி நிரப்புதல்.

**M - 312** மீட்டர் அல்லது சென்டிமீட்டர் போன்ற திட்ட அளவைகளை பயன்படுத்தி நீளம் மற்றும் தொலைவினைத் தோராயமாகக் கணக்கிடுதல் அளத்தல் மற்றும் அவற்றிக்கிடையேயுள்ள தொடர்புகளைக் கண்டறிதல்.

**M - 313** பொருள்களின் எடையினை எளிய தராசைக் கொண்டு கிராம் மற்றும் கிலோகிராம் போன்ற திட்ட அலகுகளைப் பயன்படுத்திக் கண்டறிதல்.

**M - 314** வெவ்வேறு கொள்கலன்களில் கொள்ளளவுகளைத் திட்டம் சாரா அலகுகளைக் கொண்டு ஒப்பிடுதல்.

**M - 315** வாழ்க்கைச் சுழல்களின் கிராம் மற்றும் கிலோகிராம் கொண்ட அளவைகளைப் பயன் படுத்திக் கூட்டுதல் மற்றும் கழித்தல்.

**M - 316** நாட்காட்டியில் ஒரு குறிப்பிட்ட நாள் மற்றும் கிழமையை அடையாளம் காணுதல்.

**M - 317** சுவர்க்கடிகாரம் / கைக்கடிகாரத்தை பயன்படுத்திச் சரியான நேரத்தினைக் கண்டறிதல்.

**M - 318** எளிய வடிவங்களை மற்றும் எண்களின் அமைப்பு முறைகளை விரிவாக்குதல்.

**M - 319** தரவுகளைப் பதிவு செய்ய, கோடுகளைப் பயன்படுத்துதல், அத்தரவுகளைப் படங்களாகக் குறித்துக் காட்டுதல் / மற்றும் முடிவுகளைப் பெறுதல்.

### சூழ்நிலையியல் அறிவியல்

**EVS - 301** உடனடிச் சுற்றுப்புறங்களில் உள்ள தாவரங்களின் இலைகள், மரம், தண்டு பட்டைகளின் எளிய உற்றுநோக்கதக்க பண்புகளை அடையாளம் காணுதல். (எ.கா) வடிவம், நிறம், மணம், அமைப்பு

**EVS - 302** உடனடிச் சுற்றுப்புறங்களில் உள்ள விலங்கு மற்றும் பறவைகளின் எளிய பண்புகளை அடையாளம் காணுதல் (எ.கா) இயக்கம், வாழிடம், உணவு முறைகள் மற்றும் ஒலிகள்.

**EVS - 303** தமக்கும் தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் மற்றும் அவர்களுக்கு இடையேயான உறவு முறைகளையும் அடையாளம் காணுதல்.

**EVS - 304** வீடு, பள்ளி மற்றும் அருகாமையில் உள்ள பொருட்கள் குறியீடுகள். (பாத்திரங்கள், அடுப்பு, போக்குவரத்து, தகவல் தொடர்பு முறைகள், குறியீட்டுப்பலகைகள் மற்றும் பிற இடங்கள் (பல்வகை வீடுகள், இருப்பிடங்கள், பேருந்து நிலையம், பெட்ரோல் நிரப்பும் மையம் ) செயல்பாடுகள் (மக்கள் செய்யும் தொழில்கள், சமையல் முறைகள்) போன்றவற்றை அடையாளம் காணுதல்.

**EVS - 305** பல்வேறு வயதுள்ள மனிதர்களின் உணவுத் தேவைகள்: விலங்குகள் மற்றும் பறவைகள், நீர் மற்றும் உணவு இருப்பு, வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் நீரின் பயன்பாடு ஆகியவை குறித்து விவரித்தல்.

**EVS - 306** குடும்ப உறுப்பினர்களின் பணிகள், குடும்பத்தின் தாக்கங்கள் (பண்புகள் / சிறப்பியல்புகள் / பழக்கவழக்கங்கள் / நடவடிக்கைகள்) அனைவரும் கூடி வாழ்வதின் தேவை போன்றவற்றை வாய்மொழி / எழுத்து வழி அல்லது பிற வழிகளில் விவரித்தல்.

**EVS - 307** பல்வேறு புலன் உணர்வுகளைப் பயன்படுத்தி (தோற்றம் / வசிப்பிடம் / உணவுமுறை / இயக்கம் / விருப்பு – வெறுப்புகள் / வேறு பிற பண்புகள்) பொருள்கள் , பறவைகள், விலங்குகள் அவற்றின் சிறப்பியல்புகள், ஒற்றுமைகள் / வேற்றுமைகளின் அடிப்படையிலான செயல்பாடுகளை வகைப்படுத்துதல்.

**EVS - 308** தற்போதும் முற்காலத்திலும் (மூத்தோர்களின் காலத்தில்) பயன்படுத்தப்பட்ட பொருள்களையும் வேறுபடுத்துதல். (எ.கா) உடைகள் / பாத்திரங்கள் / விளையாட்டுக்கள் மக்களின் பணிகள்

**EVS - 309** வீடு / வகுப்பு / பள்ளி ஆகியவற்றில் பொருள்கள் / இடங்கள் அமைந்துள்ள திசைகள் மற்றும் இடத்தை எளிய வரைபடத்தில் குறிகள் / குறியீடுகள் / வாய்மொழிச் சொற்கள் மூலம் கண்டறிதல்.

**EVS - 310** நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் / செயல்பாடுகளின் தன்மைகளை யூகித்தல். அளவீட்டைக் கணித்தல் மற்றும் குறிகள் / திட்டமிடா அலகுகளைப் ( முழம் / தேக்கரண்டி போன்றவை பயன்படுத்திச் சரிபார்த்தல்.

**EVS - 311** பல்வேறு வழிகளில் பார்வையிட்ட / இடங்கள் / செயல்கள்/ பொருள்கள் ஆகியவற்றின் தகவல்கள், உற்று நோக்குதல்கள், அனுபவங்களைப் பதிவு செய்தல், அமைப்பு முறையினை யூகித்தல். (எ.கா) பருவங்கள் / நிலவின் உருவ அமைப்புகள்

**EVS - 312** எளிய வரைபடங்கள் (வகுப்பறை / வீடு / பள்ளியின் பகுதிகள்) ஓவியங்கள், வடிவங்கள், அழகுக்கான அமைப்புமுறை, மாதிரிகள், பொருள்களின் மேல், முன் பக்கத் தோற்றங்கள், எழுச்சி வாக்கியங்கள் கவிதைகள் போன்றவற்றை உருவாக்குதல்.

**EVS - 313** உள்ளூர் / உள்ளரங்க விளையாட்டு / வெளியரங்க விளையாட்டுக்கள் மற்றும் பிற கூட்டுப் பணிகளின் விதிகளை உற்று நோக்குதல்.

**EVS - 314** பள்ளி மற்றும் குடும்பத்தில் நீர் மற்றும் உணவுப்பொருள்களை வீணாக்குதல் / தவறாக பயன்படுத்துதல், பாலினம் சார்ந்த குடும்பத்திலுள்ள செயல்கள் / விளையாட்டு / உணவு போன்றவற்றில் காணப்படும் மரபுரீதியான எண்ணங்கள், தவறான / நல்ல எண்ணத்துடன் ஒருவரைத் தொடுதல் போன்றவற்றில் தன் கருத்தைக் கூறுதல்.

**EVS - 315** சுற்றுச்சூழலில் உள்ள தாவரங்கள், விலங்குகள், மூத்தோர், மாற்றுத்திறனாளிகள், வேறுபட்ட குடும்ப அமைப்பு பற்றிய உணர்வுகளை வெளிப்படுத்துதல்(தோற்றம், திறமைகள், வாய்ப்புகள் – விருப்புகள் / வெறுப்புகள் மற்றும் அடிப்படைத் தேவைகளான உணவு, இருப்பிடம் போன்றவற்றின் பன்முகத்தன்மைகாக)

# கற்றல் விளைவுகள்

## (தொடக்கநிலை வகுப்புகளுக்கான கற்றல் விளைவுகள்)

## நான்காம் வகுப்பு

### தமிழ்

**T - 401** பிறர் கூறுவதைக் கவனமுடன் கேட்கவும் அதன் மீதான தங்கள் கருத்துகளை, எதிர் வினைகளை வெளிப்படுத்தவும், வினாக்கள் எழுப்பவும் செய்தல்.

**T - 402** பல்வேறு படைப்புகளின் தலைப்புகள், சூழ்நிலைகள், விளக்கப் படங்கள், கதை மாந்தர்கள் குறித்துப் பேசவும் தனிப்பட்ட கருத்துகளை புலப்படுத்தவும் இயலுதல்.

**T - 403** கதைகள் பாடல்களைத் தங்கள் சொந்த மொழியில், தாங்கள் விரும்பும் முறையில் கூறுவதுடன் அவற்றில் தங்கள் கருத்துக்களைச் சேர்த்து சொல்லவும் இயலுதல்.

**T - 404** செய்தித்தாள்களின் தலைப்புச் செய்திகளில் தேசிய அளவிலான, சமூகம் சார்ந்த உணர்வுப்பூர்வமான செய்திகளை இனம் கண்டு அவை குறித்துக் கலந்துரையாடுதல்.

**T - 405** தங்கள் அனுபவத்தின் வாயிலாக உணர்ந்தவற்றைத் தாங்கள் படித்தவற்றுடன் (பேச்சு வடிவிலோ, எழுத்து வடிவிலோ) தொடர்புபடுத்துதல்.

**T - 406** கற்றல் மூலை மற்றும் நூலகத்தில் இருந்து தாங்கள் விரும்பும் நூல்களைத் தெரிவு செய்து தாங்களே படித்திட ஆர்வமுடன் இருத்தல்.

**T - 407** படிநிலைப்படுத்தப்பட்ட பல்வேறு தலைப்புகளில் இடம்பெறும் சொற்கள், பண்பாடு மற்றும் தொழில் தொடர்பான சொற்கள் போன்றவற்றின் பயன்பாடு மிகவும் ஊக்குவிக்கப்பட வேண்டும்

**T - 408** எழுத்தில் பதிவு செய்யும் போது சொற்களின் பயன்பாட்டை மதிப்பிடல், பெயர்ச்சொல், பெயரடைகள், ஒருமை, பன்மை போன்றவற்றின் நுட்பமான வேறுபாடுகளை உணர்ந்து அவற்றைத் தமிழ்மொழி நடையில் பயன்படுத்துதல்

**T - 409** ஒரே பொருண்மையுள்ள பல்வேறு சொற்களுக்கு இடையிலான நுட்பமான வேறுபாடுகளை அறிந்து, அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் அவற்றைத் தங்கள் சொந்த மொழியில் பயன்படுத்துதல்.

**T - 410** பல்வேறு சூழல்கள் மற்றும் நோக்கங்களுக்கு ஏற்ப எழுதுதல் வேலையை மேற்கொள்ளுதல்.

**T - 411** எழுதுதல் செயல்முறையைப் புரிந்து கொண்டு அதனடிப்படையில் தாங்களே முன்வந்து அல்லது ஆசிரியரின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப தங்களின் எழுத்துப் பணிகளை மதிப்பீடு செய்தல்.

**T - 412** புதிய சொற்களின் பொருளை உணர்ந்து அவற்றை தங்கள் எழுத்துக்களில் பயன்படுத்துதல்.

**T - 413** நிறுத்தக் குறிகளைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துதல்.

**T - 414** கற்பனையுடன் கூடிய கதைகளை எழுதுதல்.

### ENGLISH

**E - 401** Recites poems with appropriate expressions and intonation

**E - 402** Enacts different roles in short skits.

**E - 403** Responds to simple instruction, announcements in English made in class / school

**E - 404** Responds verbally / in writing in English to questions based on day - to - day life experience, an article, story or poem heard or read.

**E - 405** Describe briefly, orally / in writing about events, places and / or personal experiences in English

**E - 406** Read subtitles on TV, titles of books, news headlines, pamphlets and advertisements

**E - 407** Shares riddles and tongue - twisters in English

**E - 408** Solves simple cross word puzzles, builds word chains, etc.

**E - 409** Infers the meaning of unfamiliar words by reading them in context

**E - 410** Uses dictionary to find out spelling and meaning

**E - 411** Writes / types dictation of short paragraphs (7 to 8 sentences)

**E - 412** Uses punctuation marks appropriately in reading aloud with intonations and pauses such as question mark, comma and full stop.

**E - 413** Uses of punctuation marks appropriately in writing such as question mark, comma, full stop and capital letters

**E - 414** Writes informal letters are messages with a sense of audience

**E - 415** Uses linkers to indicate connections between words and sentences such as 'First', 'Next', etc.

**E - 416** Uses nouns, verbs, adjectives, and prepositions in speech and Writing.

**E - 417** Reads printed script on the classroom Walls, notice board, in posters and in advertisements

**E - 418** Speaks briefly on familiar issue like conservation of water; and experiences of day to day life like visit to a zoo ; going to a mela

**E - 419** Presents orally and in writing the highlights of a given written text / a short speach / narration / video, film, pictures, photograph etc.

### கணக்கு

**M - 401** 2 மற்றும் 3 இலக்க எண்களின் பெருக்கல்

**M - 402** வரைபடம் (புள்ளி வரைதல் மூலம்) அல்லது சம பங்கீடு அல்லது தொடர் கழித்தல் மற்றும் பெருக்கலுக்கும் வகுத்தலுக்கும் உள்ள தொடர்பினை பயன்படுத்துதல். போன்ற வெவ்வேறு முறைகளில் ஒரு எண்ணை மற்றொரு என்னால் வகுத்தல்.

**M - 403** அடிப்படை கணித செயல்பாடுகளை (கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்) பயன்படுத்தி ரூபாய், நீளம், நிறை மற்றும் கொள்ளளவு சார்ந்த எளிய வாழ்வியல் கணக்குகளை உருவாக்குதல் மற்றும் தீர்வு காணுதல்

**M - 404** காகித மடிப்பு மற்றும் பொருள்கள் சேகரித்தல் மூலம் கொடுக்கப்பட்ட படத்தின் முழுப்பகுதியில் அரை, நான்கில் ஒன்று, நான்கில் மூன்று ஆகியவற்றைக் கண்டறிதல்.

**M - 405** எண்களைப் பயன்படுத்தி பின்னத்தினை அரை, நான்கில் ஒன்று, நான்கில் மூன்று என்று வெளிப்படுத்துதல்.

**M - 406** ஒரு பின்னத்தின் சமான பின்னங்களை எழுதி அவற்றின் சமத்தன்மையைக் காண்பித்தல்.

**M - 407** வட்டத்தின் மையம், ஆரம் மற்றும் விட்டம் ஆகியவற்றைக் கண்டறிதல்.

**M - 408** தள நிரப்பிகளாகப் பயன்படும் வடிவங்களைக் கண்டறிதல்.

**M - 409** கொடுக்கப்பட்ட வலையமைப்பை கொண்டு கனசதுரம், கனசெவ்வகத்தை உருவாக்குதல்

**M - 410** சமச்சீர் என்ற கருத்தினைக் காகிதம் மடித்தல், காகிதம் வெட்டுதல், மை சிந்துதல் போன்ற செயல்பாடுகள் மூலம் அதன் ஒத்த தன்மையைக் காண்பித்தல்.

**M - 411** எளிய பொருள்களின் மேல் புறத்தோற்றம், முன்புறத் தோற்றம் மற்றும் பக்கத் தோற்றத்தை வரைதல்.

**M - 412** எளிய வடிவியல் ( முக்கோணம், செவ்வகம், சதுரம்) வடிவங்களின் சுற்றளவு மற்றும் பரப்பளவினைக் கொடுக்கப்பட்ட வடிவத்தினைஓர் அலகாகக் கொண்டு கண்டுபிடித்தல். (எ.கா) ஒரு மேசையின் மேற்பரப்பில் எத்தனை புத்தகங்களைக் கொண்டு முழுமையாகப் பரப்ப இயலும்.

**M - 413** மீட்டரை சென்டி மீட்டராகவும், சென்டிமீட்டரை மீட்டராகவும் மாற்றுதல்.

**M - 414** பொருளின் நீளம் / இரண்டு இடங்களுக்கு இடைப்பட்ட தொலைவு வெவ்வேறு பொருள்களின் எடை, திரவங்களின் கன அளவு போன்றவற்றைத் தோராயமாகக் கண்டறிந்து,சரியான அளவுடன் தோராய மதிப்பினைச் சரிபார்த்தல்.

**M - 415** நீளம், தொலைவு, எடை, கன அளவு மற்றும் நேரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய வாழ்வியல் கணக்குகளுக்கு நான்கு அடிப்படைக் கணிதச் செயல்பாடுகளைக் கொண்டு தீர்வு காணல்

**M - 416** கடிகாரத்தில் மணி மற்றும் நிமிடங்களைப் பார்த்து முற்பகல் நேரம், பிற்பகல் நேரம் என்று வெளிப்படுத்துதல்.

**M - 417** 24 மணி நேர கடிகாரத்தை 12 மணி நேர கடிகாரத்தோடு தொடர்புபடுத்துதல்.

**M - 418** அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளின் கால நேரம், கால இடைவெளி ஆகியவற்றை முன்னோக்கி எண்ணுதல், பின்னோக்கி எண்ணுதல், கூட்டல் மற்றும் கழித்தல் மூலம் கணக்கிடுதல்

**M - 419** பெருக்கல் மற்றும் வகுத்தல் செயல் பாடுகளில் அமைப்பு முறையைக் கண்டறிதல். (9 மடங்குகள் வரை.)

**M - 420** சமச்சீர் தன்மையை அடிப்படையாகக் கொண்ட வடிவியல் அமைப்பு முறையினை உற்று நோக்குதல், இனம் காணுதல் மற்றும் நீட்டித்தல்.

**M - 421** சேகரிக்கப்பட்ட தகவல்களை அட்டவணை மற்றும் பட்டை வரைபடம் மூலம் வெளிப்படுத்தி அவற்றிலிருந்து பொருளுணர்தல்.

### சூழ்நிலையியல் அறிவியல்

**EVS - 401** உடனடிச் சுற்றுப்புறத்தில், மலர்கள் வேர்கள் கனிகளின் எளிய பண்புகளைக் (எ.கா) வடிவம், நிறம், மணம் சுவை எங்கே வளர்கின்றன / பிற தகவல்களை) கண்டறிதல்.

**EVS - 402** பறவைகள் மற்றும் விலங்குகளின் வேறுபட்ட பண்புகளைக் ( அலகுகள் / பற்கள் / நகங்கள் / செவி மாடல்கள் / உரோமம் / கூடுகள் / வாழிடங்கள் போன்றவை ) கண்டறிதல்.

**EVS - 403** நீட்டிக்கப்பட்ட குடும்பத்தில் தனக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும், அவர்களுக்கு இடையே உள்ள உறவு முறையினையும் கண்டறிதல்.

**EVS - 404** பறவைகளின் (கூடு கட்டுதல்) விலங்குகளின் (எறும்பு, தேனீக்கள், யானை) குழு / மந்தை நடத்தைகள், குடும்பத்தில் மாற்றங்களை (எ.கா) பிறப்பு, திருமணம் வேலை நிமித்தமாக இடமாற்றம் போன்ற காரணங்களை விளக்குதல்.

**EVS - 405** பல்வேறு திறன் சார்ந்த பணிகளை (பண்ணைத் தொழில் போன்றவை, கட்டுமானத் தொழில் கைத்தொழில், கலை / கைத்தொழில் ) மூத்தோர்களிடமிருந்து கற்றுக்கொண்ட வீதம், அன்றாட வாழ்க்கையில் அவர்கள் பெற்ற பயிற்சிகள் (நிறுவனங்களின் பணிகள்) போன்றவற்றை விளக்குதல்

**EVS - 406** அன்றாடத் தேவைகள், உற்பத்தி செய்வதன் செயல்முறை மற்றும் அவற்றைப் பெறுதல் ( எ.கா ) உணவு நீர், உடைகள் அதாவது அப்பொருள்களின் மூலத்திலிருந்து வீடு வரை, (எ.கா) விவசாய பொருள்கள் வயல்வெளிகளிலிருந்து வீடு வரை, சந்தைக்கும் பிறகு வீட்டிற்கு, நீர் உள்ளூர் மூலத்திலிருந்து வீடு / அருகாமைப் பகுதியில் சுத்தரிகரிக்கப்படும் முறைகள்

**EVS - 407** பழங்காலத்தில் இருந்த பொருள்கள் மற்றும் செயல்பாடுகளைத் தற்காலத்தில் உள்ளவற்றோடு வேறுபடுத்துதல். (எ.கா) போக்குவரத்து, நாணயம், வீடுகள், பொருள்கள் கருவிகள், பண்ணைத்தொழில், கட்டுமானம் போன்றவை.

**EVS - 408** விலங்குகள், பறவைகள், தாவரங்கள், பொருள்கள், கழிவுப்பொருள்களை உற்று நோக்கக் கூடிய பண்புகளின் அடிப்படையில் (எ.கா) தோற்றம் செய்தி மடல்கள், உரோமம் அலகுகள், பற்கள், தோலின் அமைப்பு) உள்ளார்ந்த பண்புகள் (வீட்டு விலங்குகள் / காட்டு விலங்குகள் / கனிகள் / காய்கறிகள் / பருப்பு வகைகள் / வாசனை பொருட்கள் மற்றும் அவை கெட்டுப்போகாமல் இருக்கும் நாள்கள் )பயன்கள் (உண்ணக்கூடியவை, மருத்துவ பயன்பாடு, அழகுபடுத்தும் பயன் , பிற பயன்கள், மீண்டும் பயன்படுத்துதல்) பண்பு நலன்களை (வாசனை, சுவை, விருப்புகள் போன்றவை) வகைப்படுத்துதல்.

**EVS - 409** ஊகித்தல் (பண்புகள், செயல்களின் நிபந்தனைகள்) இடம் சார்ந்த அளவைகளை (தூரம், எடை, நேரம் காலநேரம்) உள்ளூர் / திட்ட அலகுகளில் (கிலோ, அடி, கால் போன்றவை) கணித்து அவற்றை எளிய கருவிகள் / அமைப்புடன் சரிபார்த்து காரணகாரியத் தொடர்பினை ஏற்படுத்துதல். (ஆவியாதல், நீர்மமாதல், கரைதல், உறிஞ்சுதல், இடம் சார்ந்த அருகில் / தொலைவில், பொருள்கள் சார்ந்த அளவு மற்றும் வளர்ச்சி காய்கறிகள்,பழங்கள், மலர்கள் கெட்டுப்போகாமல் இருக்கும் அதிகபட்ச நாள்கள்.

**EVS - 410** பார்வையிட்ட இடங்கள் (மேளா, பண்டிகள், வரலாற்று சிறப்புமிக்க இடங்கள்), பொருள்கள், செயல்பாடுகள்,நிகழ்வுகளுக்கான உற்றுநோக்குதல்கள் / அனுபவங்கள் / தகவல்களைப் பல்வேறு வழிகளில் பதிவுசெய்து செயல்பாடுகள் / நிகழ்வுகளின் அமைப்பு முறைகளைக் கணித்தல்

**EVS - 411** வரைபடங்களைப் பயன்படுத்தி பள்ளி / அருகாமைப் பகுதியில் குறிப்பிட்ட இடத்தினை அறிய குறியீடுகள், பொருள்கள் / இடங்களின் அமைவிடம் ஆகியவற்றைக் கண்டறிந்து திசைகளுக்கு வழிகாட்டுதல்.

**EVS - 412** இரயில் பயணச்சீட்டு / அட்டவணை, பணம், (பணத்தாள் / நாணயங்கள்) சுவரொட்டிகள், குறியீட்டுப்பலகைகளில் உள்ள தகவல்களைப் பயன்படுத்துதல்.

**EVS - 413** உள்ளூர் / கழிவுப் பொருள்களை பயன்படுத்தி (பள்ளி/ அருகாமைப்பகுதி, நிகழ்வு வரைபடம் போன்றவற்றின்) எளிய வரைபடங்கள், படத்தொகுப்புகள், சுவரொட்டிகள், வண்ணக்கோலங்கள், மாதிரிகள், அமைப்புகள் ஒட்டுப்படம் உருவாக்குதல்.

**EVS - 414** குழந்தை உரிமைகள், மதிய உணவு, சமுதாயத்துடன் இணைந்து உணவு உண்ணுதல், பொது இடங்களைப் பயன்படுத்துதில் சாதி சார்ந்த பாகுபாட்டுப் பழக்கங்கள் (எ.கா : மரபு சார்ந்த எண்ணங்கள் வாய்ப்புகளை உருவாக்குதல் / முடிவெடுத்தல் / பிரச்சினைகளைத் தீர்த்தல்) போன்றவற்றில் குடும்பம் / பள்ளி / அருகாமைப் பகுதிகளில் ஏற்பட்ட அனுபவம் / உற்றுநோக்கிய பிரச்சினைகள் பற்றிய கருத்துகளைத் தெரிவித்தல்.

**EVS - 415** வளங்கள் (உணவு, நீர் மற்றும் பொதுச் சொத்து) சுத்தம், கழிவுப்பொருள்களைக் குறைத்தல், மீண்டும் பயன்படுத்துதல். மறுசுழற்சி செய்தல், பல்வேறு உயிரினங்களைப் பராமரித்தல் (தாவரங்கள், விலங்குகள் முதியோர், மாற்றுத்திறனாளிகள்) போன்றவற்றிக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

# கற்றல் விளைவுகள்

## ( தொடக்கநிலை வகுப்புகளுக்கான கற்றல் விளைவுகள் )

## ஐந்தாம் வகுப்பு

### தமிழ்

**T- 501** மாணவர்கள் தங்கள் கேட்ட அல்லது படித்த பல்வேறு வகை இலக்கியங்கள் குறித்துப் பேசவும், அவை குறித்துக் கலந்துரையாடவும், பகுப்பாய்வு செய்யவும் வாய்ப்பளித்தல்.

**T- 502** தங்களின் சுற்றுப்புறத்தில் நடக்கும் பல்வேறு நிகழ்வுகளுக்கு எதிர்வினை புரிதல் (எழுத்து வடிவில்) அல்லது வினாக்கள் எழுப்புதலை ஊக்கப்படுத்துதல்.

**T- 503** ஒருவர் மொழியின் நுட்பமான கூறுகளை மனதிற் கொண்டு தங்களுக்கான சொந்த மொழியைக் கட்டமைக்க வேண்டும்.

**T- 504** தாங்கள் படித்த, கேட்ட ( சமூகம், நகைச்சுவை, வீரச்செயல்கள்) கருத்துகள் பற்றிப் பேசவும், வினாக்கள் எழுப்பவும் தங்கள் நோக்கத்திற்கு ஆதரவான விளக்கம் அளிக்கவும் இயலுதல்.

**T- 505** சொற்களின் பொருளை அகராதிகளில் கண்டறிதல்

**T- 506** மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்து கொண்டு அவற்றைத் தம் எழுத்துகளில் கவனமாகப் பயன்படுத்துதல்.

**T- 507** பல்வேறு சூழல்களில் பல்வேறு நோக்கங்களுடன் எழுதும் பொழுது நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்துவதில் கவனமுடன் இருத்தல்.

**T- 508** பல்வேறு தலைப்புகளின் கீழ் படிநிலைப்படுத்தப்பட்ட சொற்களையும், தொழில்கள் மற்றும் பண்பாடு சார்ந்த சொற்களையும் நன்றாகப் புரிந்து கொள்ளுதல், பொருத்தமான இடங்களில் பயன்படுத்துதல்.

**T- 509** தங்கள் சுற்றுப்புறத்தில் நடக்கும் நிகழ்வுகளை நுட்பமாக உற்று நோக்கி அவற்றுக்கான எதிர்வினைகள் எழுத்து வடிவில் பதிவு செய்தல்.

**T- 510** பல்வேறு நோக்கங்கள் மற்றும் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதும் பொழுது அதற்கேற்ற படியான சொற்கள், தொடர்கள், நிறுத்தற்குறிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல்.

**T- 511** பாடநூல்களில், துணைப்பாட நூல்களில் இடம்பெறும் உணர்வுப்பூர்வமான சிக்கல்களை எழுத்து வடிவில் வெளிப்படுத்துதல்.

**T- 512** ஒருவரது கற்பனையின் அடிப்படையில் கதைகள், பாடல்கள், கடிதங்கள் எழுத அனுமதித்தல், அவற்றை ஊக்குவித்தல்.

### ENGLISH

**E- 501** Answers coherently in written or oral form to questions in English based on day - to - day life experiences, unfamiliar story, Poem heard or read.

**E- 502** Recites on the shares English songs, poems, games, riddles, stories, tongue twisters etc. Recites and shares with peers and family members.

**E- 503** Acts according to instructions given in English, in games / sports such as Hit to the 'ball' ' Throw the ring 'Run to the finish line' etc.

**E- 504** Reads independently in English story books, news items / headlines, advertisements etc. Talk about it, and composes short Paragraphs.

**E- 505** Conducts short interviews of people around him. (e.g.) Interviewing grandparents, teachers school librarian and gardener etc.

**E- 506** Uses meaningful grammatically correct sentence to describe and generate incidents ; and for framing questions.

**E- 507** Uses synonyms such as 'big / large' ' shut / close' and antonyms like inside / outside, light / dark from clues in context.

**E- 508** Reads text with comprehension, locates details and sequence of events.

**E- 509** Connects idea that he / she has inferred, through reading and interaction, with his / her personal experiences.

**E- 510** Takes dictation for different purposes, such as lists, paragraphs, dialogues etc.

**E- 511** Uses the dictionary for reference.

**E- 512** Identifies kinds of nouns, adverbs; differentiates between simple past and simple present verbs.

**E- 513** Writes paragraphs in English from verbal visual clues, with appropriate Punctuation marks and linkers.

**E- 514** Writes a ' mini biography' and 'mini autobiography'

**E- 515** Writes informal letters, messages and e- mails.

**E- 516** Reads print in the surroundings ( advertisements ), directions, names of place etc.) understands and answer Queries.

**E- 517** Attempts to write creatively ( stories, poems, posters, etc)

**E- 518** Writes and speaks on peace equality etc. suggesting personal views.

**E- 518** Appreciates either verbally / in writing the variety in food, dress, customs and festivals as read heard in his /her day-to-day life in story books / heard in narratives / seen in videos films etc.

### கணக்கு

**M - 501** மாணவர்கள் தங்கள் சூழலில் பயன் படுத்தும் 1000 விட பெரிய எண்களை எழுதுதலும் வாசித்தலும்.

**M - 502** எண்களின் இட மதிப்பைப் புரிந்து கொண்டு 1000 – க்கு மேற்பட்ட எண்களின் நான்கு கணித அடிப்படைச் செயல்பாடுகளை மேற்கொள்ளல்.

**M - 503** நிலையான படிநிலையைப் பயன்படுத்தி தரப்பட்ட எண்ணை மற்றொரு எண்ணால் வகுத்தல்.

**M - 504** எண்களின் கூடுதல், வேறுபாடு, பெருக்கற்பலன், ஈவு ஆகியவற்றை மதிப்பீட்டு நிலையான படிநிலைகள் அல்லது எண்ணை பிரித்து பின்னர் அடிப்படைச் செயல்களைபயன்படுத்துதல் போன்ற பல்வேறு உத்திகள் மூலம் சரியான விடையைக் கண்டறிந்து அவற்றை சரிபார்த்தல். (எ. கா.) 9450 என்ற எண்ணை 25 ஆல் வகுக்க 9000 த்தை 25 ஆல் வகுத்த பிறகு 400 ஐ 25 ஆல் வகுத்து, 50 ஐ 25 ஆல் வகுத்து அனைத்து ஈவுகளையும் கூட்டி சரியான விடையைப் பெறுதல்.

**M - 505** ஒரு தொகுப்பில் உள்ள பாகத்திற்கான எண்ணைக் கண்டறிதல்.

**M - 506** கொடுக்கப்பட்டுள்ள பின்னத்தின் சமான பின்னங்களை அடையாளம் காணல் மற்றும் உருவாக்குதல்.

**M - 507** கொடுக்கப்பட்டுள்ள பின்னங்களான $\frac{1}{2}, \frac{1}{4}, \frac{1}{5}$ ஐ தசம வடிவில் எழுதுதல் மற்றும் தசம எண்களைப் பின்ன வடிவில் எழுதுதல். (எ.கா.) நீளத்தின் அலகு மற்றும பண மதிப்புகளின் பின்னங்களைப் பயன்படுத்துதல். ரூ. 10 – இன் அரைப்பங்கு ரூ. 5.

**M - 508** பின்னங்களைத் தசம எண்களாவும் தசம எண்களைத் பின்னங்களாவும் மாற்றுதல்.

**M - 509** கோணங்களைச் செங்கோணம், குறுங்கோணம், விரிகோணம் என வகைப் படுத்துதல், அக்கோணங்களை வரைதல் மற்றும் வடிவொற்றி வரைதல்.

**M - 510** தங்களுடைய உடனடிச் சூழலில் சூழல் சமச்சீர் மற்றும் பிரதிபலிப்பு சமச்சீர் தன்மை கொண்ட ஆங்கில பெரிய எழுத்துகள் மற்றும் இருபரிமாண வடிவங்களை அடையாளம் காணுதல்.

**M - 511** சிறப்பு வலையமைப்பினைப் பயன்படுத்தி, கனசதுரம், உருளை மற்றும் கூம்பு ஆகிய வடிவங்களை உருவாக்குதல்.

**M - 512** நீட்டலளவை, நிறுத்தலளவை, முகத்தலளவைகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மேலின அலகுகளையும், கீழின அலகுகளையும் தொடர்புபடுத்துதல் மற்றும் கீழின அலகினை மேலின அலகாகவும் மேலின அலகினைக் கீழின அலகாகவும் மாற்றுதல்.

**M - 513** திடப் பொருளின் கொள்ளளவைத் தெரிந்த அலகினைக் கொண்டு மதிப்பிடுதல், எடுத்துக் காட்டாக ஒரு வாளியின் கொள்ளளவானது 20 குவளையின் கொள்ளளவிற்குச் சமம்.

**M - 514** பணம், நீளம், நிறை, கொள்ளளவு மற்றும் கால இடைவெளி தொடர்பான கணக்குகளை நான்கு அடிப்படைக் கணிதச் செயல்பாடுகளைப் பயன்படுத்திக் கணக்கிடுதல்

**M - 515** முக்கோண எண்கள் மற்றும் சதுர எண்களின் அமைப்பு முறையைக் கண்டறிதல்

**M - 516** அன்றாட வாழ்க்கைச் சூழல்கள் தொடர்பான பல்வேறு தரவுகளைச் சேகரித்து அவற்றை அட்டவணை, பட்டை விளக்கப் படம் மூலம் வெளிப்படுத்திப் பொருளுணர்தல்.

### சூழ்நிலையியல் அறிவியல்

**EVS - 501** விலங்குகளின் மீத்திறன் புலன்கள் மற்றும் மாறுப்பட்ட பண்புகள் ( பார்த்தல், நுகர்தல், கேட்டல், உறக்கம், ஒலி போன்றவற்றை ) மற்றும் ஒலி, ஒளி, உணவு போன்றவற்றிக்கு அவற்றின் துலங்கல்களை விளக்குதல்.

**EVS - 502** நமது அன்றாட வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளை ( உணவு, நீர், போன்றவை) பெறுதல் மற்றும் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துதல் பற்றி விளக்குதல். (எ.கா.) பண்ணை உற்பத்திப் பொருள்கள் சமையலறைக்கும், தானியங்கள் உணவாகவும் மாற்றப்படுதல், பதப்படுத்தம் தொழில் நுட்பங்கள் சேமிப்பு மற்றும் நீர் ஆதாரங்களைக் கண்டறிதல்.

**EVS - 503** விலங்குகள். தாவரங்கள் மற்றும் மனிதர்களிடையே உள்ள சார்ந்து வாழ்தலை விவரித்தல். (எ. கா. ) விலங்குகளிடமிருந்து வாழ்வாதாரத்தைச் சமுதாயம் பெறுதல், விதை பரவுதல் போன்றவை.

**EVS - 504** அன்றாட வாழ்வில் பல்வேறு நிறுவனங்களின் பங்கு மற்றும் பணிகளை விளக்குதல். ( வங்கி, ஊராட்சி, கூட்டுறவு அமைப்புகள், காவல் நிலையம்.) போன்றவை.

**EVS - 505** நில அமைப்பு முறை, காலநிலை, வளங்கள்( உணவு,நீர், இருப்பிடம்,வாழ்வாதாரம் ) மற்றும் கலாச்சார வாழ்க்கை ஆகியவற்றிக்கு இடையே உள்ள தொடர்பினை நிலைநாட்டுதல். ( தொலை தூர / கடினமான பகுதிகளான வெப்ப / குளிர் பாலைவனங்களில் வாழ்க்கை )

**EVS - 506** வடிவம், சுவை, நிறம். தன்மை, ஒலி பண்புகள் போன்றவற்றின் அடிப்படையில் பொருட்கள் செயல்களை வகைப்படுத்துதல்.

**EVS - 507** நாணயங்கள், ஓவியங்கள், நினைவு சின்னங்கள் அருங்காட்சியகங்கள் போன்றவை வாயிலாக முற்காலத்தில், தற்போதும் பழக்கங்கள், செயல்கள் மற்றும் தொழில் நுட்பங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கண்டறிதல் மற்றும் இதுபற்றி மூத்தோர்களிடம் இடை வினையாற்றுதல். ( எ.கா.) விவசாயம், பாதுகாப்பு, பண்டிகைகள், உடைகள் போக்குவரத்து, பொருள்கள் அல்லது கருவிகள், தொழில்கள், கட்டடங்கள் மற்றும் வீடுகள், செயல்கள் சமைத்தல், உணவு உண்ணுதல், பணிபுரிதல் போன்றவை செயல்பாடுகள்

**EVS - 508** ஊகித்தல் ( பண்புகள், செயல்களின் நிபந்தனைகள்) இடம் சார்ந்த அளவைகள் ( தூரம்,பரப்பளவு, கன அளவு, எடை, காலம் போன்றவை) மற்றும் காலம் ஆகியவற்றை எளிய திட்ட அளவைகள் மூலம் கணித்து, எளிய கருவிகளை / அமைப்புகளை பயன்படுத்தி, அவற்றை சரிபார்த்தல். ( எ.கா.) மிதத்தல்/ மூழ்குதல் / கலக்குதல் / ஆவியாதல் விதை முளைத்தல் / உணவு கெட்டுப்போதல் சுவாசம் / சுவை).

**EVS - 509** உற்று நோக்குதல்களையும் அனுபவங்களையும் பதிவு செய்தல், தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் அளித்தல். ( எ. கா.) அட்டவணைகள் / படங்கள் / பட்டை விளக்க வரை படங்கள் / வட்ட விளக்க வரை படங்கள் மற்றும் செயல் பாடுகளின் / நிகழ்வுகளின் அமைப்பு முறையை ஊகித்து (எ.கா) – மிதத்தல், மூழ்குதல், கலக்குதல், ஆவியாதல், விதை முளைத்தல், உணவு கெட்டுப்போதல்) காரணகாரிய தொடர்பினை ஏற்படுத்துதல்.

**EVS - 510** பார்வையிட்ட இடங்கள் / ஒரு பகுதியில் முக்கிய இடங்கள் / பல்வேறு பொருள்களின் அமைவிடம் திசைகள், குறியீடுகளை நிலவரைபடத் தாளில் கண்டறிந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் பல்வேறு பகுதிகளின் அமைவிடம் பற்றிய திசைகளைக் கணித்தல்.

**EVS - 511** பல்வகை உள்ளூர் / கழிவுப் பொருள்களை பயன்படுத்திச் சுவரொட்டிகள், அமைப்புகள், மாதிரிகள், அமைப்பு முறைகள், உள்ளூர் உணவு பொருள்கள், வரைபடங்கள், நில வரைபடங்கள் உருவாக்குதல். ( அருகாமைப்பகுதி / பார்வையிட்ட பல்வேறு இடங்களின் கவிதைகள் / எழுச்சி வாக்கியங்கள் / பயணக்கட்டுரை எழுதுதல்.

**EVS - 512** உற்று நோக்கிய / அனுபவப்பட்ட பிரச்சனைகளுக்குத் தன் கருத்துகளை அளித்து, செயல்பாடுகள் / நிகழ்வுகளைச் சமுதாயத்தின் பெரிய பிரச்சனைகளோடு தொடர்புபடுத்துதல். (எ. கா.) வளங்களைப் பெறுதல் / உரிமை கொண்டாடுதலில் பாகுபாடு, குடிபெயர்தல் / இடப்பெயர்ச்சி/ விலக்கி வைத்தல், குழந்தை உரிமைகள்.

**EVS - 513** சுத்தம், சுகாதாரம், கழிவுப் பொருள்கள் மேலாண்மை, பேரிடர் / அவசரநிலை சூழ்நிலைகளுக்கும் வளங்களைப் பாதுகாத்தலுக்கும் / சேமித்தலுக்கும்(நிலம், எரிபொருள்கள் காடுகள் போன்றவை). ஆலோசனைகளை அளித்தல் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்கள் / ஒடுக்கப் பட்டவர்களுக்காக, உணர்வுப்பூர்வமான எண்ணங்களை வெளிப்படுத்துதல்.